

சிவகங்கை மாவட்டம் அரளிக்கோட்டையில் கருத்தான்கருப்பாயி தொண்டு நிறுவன அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற சிலம்பு பயிற்சி பள்ளியின் முதலாம் ஆண்டு விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ – மாணவிகளுக்கு சான்றிதழ்களை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் வழங்கி பாராட்டினார். உடன் அறக்கட்டளை நிறுவனர் மருத்துவர் கோகுலகிருஷ்ணன், மாவட்ட கழக துணைச்செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து ஆகியோர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வசித்துவரும் மாணவி ஜனனி பிளஸ்டூ தேர்வில் மாவட்ட அளவில் 592மதிப்பெண்கள் எடுத்து முதலிடம் பெற்றதை பாராட்டி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் நிதிஉதவி வழங்கினார்.உடன் மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை.ராசாமணி,ஒன்றியக் குழுத்தலைவர் திருமதிலதாஅண்ணாதுரை, அவைத்தலைவர் ரவிச்சந்திரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தந்தை

# ஆசிரியர் எஸ்.கண்ணன் மறைவு!

## கே.என்.நேரு – ஆ.ராசா – எஸ்.ரகுபதி – கே.ஆர். பெரியகருப்பன்– சிவ.வீ.மெய்யநாதன் நேரில் அஞ்சலி!

புதுக்கோட்டை, மே 17 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தந்தை ஆசிரியர் எஸ்.கண்ணன் கடந்த 13.5.2023 சனிக்கிழமை வயது முதிர்வு காரணமாக உடல்நலக்குறைவால் மறைவெய்தினார். அவரது உடல் பொது மக்கள் பார்வைக்காக கீரனூரில் உள்ள அவரது இல்லத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கீரனூர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வுகளில் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரும், கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு முன்னாள் ஒன்றிய அமைச்சரும், கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.ராசா எம்.பி,

சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னாள் ஒன்றிய அமைச்சர்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி, க.திருநாவுக்கரசர் எம்.பி, முன்னாள் அமைச்சர் கடலாடி சத்தியமூர்த்தி,

துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, திருச்சி மேயர் மு.அன்பழகன், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, எம்.சின்னத்துரை, அசோக்குமார், பிரபாகரன், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, தஞ்சை துணை மேயர் அஞ்சுகம் பூபதி, இலக்கிய அணித் தலைவர் வி.பி.கலைராஜன், மாநில நிர்வாகிகள் புதுக்கோட்டை விஜயா, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி.என். மணி, சி.ராமநாதன், செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், பரணி இ.ஏ.கார்த்திகேயன், கேசவன், கார்த்திகேயன், சுப. சரவணன், கீரை. தமிழ்ராஜா. ச.சண்முகம், அரு. வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி,

ஆர்.ஆர்.கே.கலைமணி, எஸ்.ஜெயராமன், இரா. ஆனந்த், ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அபுதாஹிர், க.ராஜேந்திரன்

ஆ.செந்தில், உதயம் சண்முகம், கே.எஸ்.சந்திரன், மு.க. ராமகிருஷ்ணன், பொன், ராமலிங்கம், என்.சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம. சத்தியசீலன் , ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, ஆர்.சாமிநாதன், வெ.முத்துக் கிருஷ்ணன், சி.சண்முகம், மா.தமிழ் அய்யா, ஒ.எஸ்.வெங்கடாச்சலம் அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன் டி.தங்கமணி, பொன்.கணேசன், வே.பொன் துரை, சக்தி ராமசாமி, ஆறு.சிதம்பரம், ரவிகுமார், அ.அடைக்கலமணி, அ.முத்து, எஸ்.எம்.சீனியார், கனேசன், அரு.வடிவேல் , தென்னலூர் எம்.பழனியப்பன். என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ராப்பூசல் எம்.செந்தில்குமார், ஆர். செல்லத்துரை, த.மணி ராஜன், சி.ஆர்.வி.சித்ரா, வை.விஜயக்குமார். உமுருகேசன், பி.அண்ணாத் துரை, எம்.எல்.அக்பர் அலி, ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், மு.பி.மணி,

பி.சின்னையா, மாலா ராஜேந்திரதுரை, மேகலா முத்து, த.செல்வம், நா.ஸ்டாலின் நாராயணசாமி, கை.பழனிச்சாமி, எம்.ஏ.எம்.இம்தியாஸ், இ.செந்தில்ராஜா, ஆர்.பாலகிருஷ்ணன், ஆர்.சுசைராஜ், ராம.செல்வராஜ், ராஅ.முத்துக்குமார், மு.கலியமூர்த்தி, வைகோ.ராஜன், எம்.எம். பாலு, டாக்டர் சி.குறிஞ்சிவாணன், மஜீத் முபாரக், பூங்குடி எம்.சிவா, அ.ரெத்தினம், மழையூர் ராமசாமி, கே.கணபதி, எம்.சுப்பையா, மணிமொழி மனோகரன், கமலா செல்வம், வே. ராஜேஷ், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி. அ.பிரபா, எம். வேலுச்சாமி, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வை. நடராஜன், மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, அஸ்ரப் அலி, ராஜேந்திர சோழன், கே. எம்.கே.ரவிக்குமார் மற்றும் மாநில, மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொது மக்கள் , உறவினர்கள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

கே.ஆர்.என் இராஜேஸ்குமார் எம்.பி. தொகுதி மேம்பாட்டின் கீழ்

# நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி உபகரணங்கள் வாங்க ரூ.41 லட்சம் நிதி உதவி!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், மே 17 -

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என் இராஜேஸ்குமார் தனது எம்.பி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.41.03 லட்சம் மதிப்பில் மருத்துவ உபகரணங்களை மாணவர்கள் பயன்பாட்டிற்காக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்.

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் மாணவர் மன்றம் துவக்க விழா, மருத்துவ கல்லூரி பயிலும் மாணவச்செல்வங்களுக்கு தேவையான நிதி யுதவியை வழங்கிட விருட்சம் என்ற அமைப்பு துவக்க விழா நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என் இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. ராம லிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு மாணவர் மன்றத்தினை திறந்து வைத்தும், மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவச்செல்வங்களுக்குத் தேவையான நிதியுதவியை வழங்கிட விருட்சம் என்ற அமைப்பினையும் தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் பேசுகையில், நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் மாணவர் மன்றத்தினையும், மருத்துவக் கல்லூரி பயிலும் மாணவச்செல்வங்களுக்குத் தேவையான நிதியுதவியை வழங்கிட விருட்சம் என்ற அமைப்பினையும் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ்விழாவில் கலந்து கொள்வதில் எனது கல்லூரி கால அனுபவங்களை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது. இந்த கல்லூரியில் பயின்ற முதலாம் ஆண்டு மாணவர்கள் அனைவரும் 100% தேர்ச்சி பெற்றுள்ளமைக்கு அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டிற்காக ரூ. 41.03 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி மருத்துவ உபகரணங்களை வழங்கி உள்ளார். அது மட்டுமல்லாது புற்று நோய் சிகிச் சைக்காகவும், கொரோனா கால சிகிச்சைக்காகவும் பல்வேறு வகைகளில் பொதுமக்களுக்கு உதவி செய்து வருகிறார். இந்த விருச்சகம் எனும் அமைப்பிற்கு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தனது ஒரு மாத ஊதியத்தினை நன்கொடையாக வழங்கியுள்ளார். அதே போன்று நானும், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலி ங்கம் எங்களது ஒரு மாத ஊதியத்தினை இந்த அமைப்பிற்கு நன்கொடையாக வழங்க உள்ளோம். மாணவச் செல்வங்கள் அனைவரும் இந்த கல்லூரி காலத்தினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு நன்றாக கல்வி பயின்று எதிர் காலத்தில் நல்லதொரு மருத்துவ சேவையினை ஆற்ற வேண்டும். நாமக்கல் மருத்துவக் கல்லூரிக்கு நற்பெயரை பெற்றுத் தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர்.சாந்தா அருள் மொழி, துணை முதல்வர் மருத்துவர் எஸ்.வெங்கட சுப்பிரமணியன், அரசு வழக்கறிஞர் செல்வம் ஆகியோர் உட்பட மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க மதுரையில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, மதுரை, மதுரை மாநகர் மாவட்டங்களில் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கான நேர்காணலில் இளைஞர் அணி செயலாளரின் தனிச் செயலாளர் செந்தில், இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் எஸ்.ஜோயல், ஜி.பி.ராஜா, இன்பா ரகு, அப்துல்மாலிக், இளையராஜா, சீனிவாசன், பிரகாஷ், பிரபு ஆகியோர் நேர்காணல் நடத்தியபோது எடுத்தபடம்.உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் பங்கேற்றனர் மற்றும் திரளான இளைஞர் அணியினரும் கலந்து கொண்டனர்.

## மாதவரம் 19 வது வட்டத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு!

சென்னை,மே.17-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 19வது வட்ட தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா, மாத்தூர் முதல் பிரதான சாலை சந்திப்பில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர்மோர், தர்பூசணி, மாம்பழம், இளநீர், மோர், குளிர்பானம், ஆகியவற்றை வழங்கினார். மேலும் 200 தாய்மார்களுக்கு தண்ணீரை சேமித்து வைக்க பிளாஸ்டிக் குடங்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிக்கு மாமன்ற உறுப்பினர் க.காசி நாதன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, பி.நிர்மல்குமார், வி.கார்த்திகேயன், கே.ஏழுமலை, சின்னமாத்தூர் வி.மணிகண்டன், மாத்தூர் பா.கோபிநாத், எஸ்.உதயகுமார், ஜி.சரவணன், கோவர்த்தனன், கதிரவன், சையத் அப்சல், பிரவீன் குமார், நாகராஜன், மாத்தூர் கே.குமார், ஐ.சி.எப். விஜயகுமார், மாத்தூர் வேலன், தமிழ், தமிழழகன், ஐ.சி.எப். சிவப்பிரகாசம், வாட்ச் மதிவாணன், ராஜேஷ், கண்ணன், ஜெயராஜ், துரை, தசரதன், சின்ன மாத்தூர் சுரேஷ், வினோத், சேவை செல்வராஜ், சிவராமன், ஜோஷி, மகளிர் அணி சாந்தா, பிரியா, அத்திகுளம் தேவி, ஜாஸ்மின், கந்தசாமி நகர் சதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் செய்திருந்தார்.

மரக்காணம் அருகே விஷ சாராயம் குடித்து இறந்த

# 12 பேரின்குடும்பத்திற்கு தலா 10 லட்சம்!

## அமைச்சர்கள் க.பொன்முடி – செஞ்சி மஸ்தான் குடும்பத்தாரிடம் வழங்கினர்!

மரக்காணம், மே 17 -

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே வம்பா மணல் பகுதியில் மரக்காணம் எக்கியர் குப்பம் மீனவர் கிராமத்தைச் சேர்ந்த பலர் விஷசாராயம் வாங்கி குடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுள்ளனர் வீட்டிற்கு சென்ற பொழுது சங்கர் வயது (55) தரணிவேல் வயது (50) சுரேஷ் வயது (65)மண்ணாங்கட்டி வயது (47) மற்றொரு மண்ணாங்கட்டி வயது (50)இவர்கள் மயங்கி கீழே விழுந்து உள்ளனர் இதனைப் பார்த்த அவர்களின் உறவினர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுவை மாநிலத்தில் உள்ள ஜிப்மர், பிம்ஸ் ஆகிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அங்கு மருத்துவர்கள் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளித்துள்ளனர். ஆனால் சிகிச்சை பலனளிக்காமல் சங்கர்,தரணிவேல், சுரேஷ் , ராஜமூர்த்தி, விஜயன், மற்றொரு சங்கர், மலர் விழி, தண்டபாணிஆகிய 8 நபர்களும் பரிதாபமாக உயிரிழந்னர். மற்றவர்களும் அதே மருத்துவமனையிலும்,உயிருக்கு ஆபத்தான நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.மேலும் விஷ சாராயம் அருந்திய 40க்கும் மேற்பட்டோர் விழுப்புரம் மாவட்டம் முண்டிய ம் பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து எக்கியர்குப்பத்தில் விஷ சாராயம் விற்பனை செய்து வந்த அமரன்24,மற்றும் அவருடன் கூட்டாக தொழில் நடத்திய முத்து வயது 31 ஆறுமுகம் வயது 42 மண்ணாங்கட்டி வயது 50ரவி வயது50ஆகிய ஐந்து பேர் மீது வழக்குப் பதிவு செய்த போலீசார் வியாபாரி அமரன், முத்து, ஆறுமுகம், ரவி, ஆகியோரை கைது செய்தனர். இந்நிலையில் மரக்காணம் பகுதியில் கள்ளச்சாராய விற்பனையால் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மற்றும் 34 பேர் தொடர்ந்துமுண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் இதன் காரணமாக மரக்காணம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வடிவேல் அழகன், கோட்டகுப்பம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு இன்ஸ்பெக்டர் சோபியா மரியா மஞ்சுளா, மரக்காணம் உதவி ஆய்வாளர் தீபன், கோட்டகுப்பம் மதுவிலக்கு ஆய்வாளர் சிவ குருநாதன் ஆகியோரை பணி இடை நீக்கம் செய்து தமிழக டிஜிபி சைலேந்திரபாபு உத்தரவிட்டுள்ளார் . இதற்கிடையே முண்டிய ம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மலர் விழி என்ற மூதாட்டியும், மண்ணாங்கட்டி, விஜயன், சங்கர், கேசவலு, ஆகியோர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தனர்.இது குறித்து தகவல் அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் விஷ சாராயத்தை விற்றவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் இதற்கு துணை போன அனைத்து காவல்துறை அதிகாரிகளின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் உத்தரவிட்டார்.மேலும் இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 10 லட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 50 ரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இந்நிலையில் முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே எக்கியார் குப்பத்தில் நிகழ்ந்த கள்ளச்சாராய இறப்புகள் தொடர்பாகவும், சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்றார். அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து ஆறுதல் கூறிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவர்களிடம் விஷ சாராயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்துகேட்டறிந்து அவர்களுக்குஉரிய சிகிச்சை அளிக்கும்படி முதலமைச்சர் உத்தரவிட்டார். மேலும் கள்ளச்சாராயத்தை தடுக்காத அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கள்ளச் சாராய வழக்கினை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றம் செய்துஉத்தரவிட்ட முதலமைச்சர் விஷ சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின்குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் நிவாரணத் தொகையை உடனடியாக வழங்க உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து விஷசாராயம் அருந்தி உயிரிழந்த சங்கர், தணிகைவேல், சுரேஷ்,ராஜமூர்த்தி, மலர் விழி ,மண்ணாங்கட்டி, விஜயன், கேசவலு ,ராஜவேலு, சங்கர், விஜயன் ஆகியோரின்குடும்பத்திற்கு நிவாரண நிதிஉதவி வழங்கப்பட்டது.

மரக்காணம் எக்கியார் குப்பத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் நேரில் சென்றுஉயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கி ஆறுதல் தெரிவித்தனர்.

இதில் விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, டாக்டர் லட்சுமணன்,

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, திண்டிவனம் ஆட்சியர் கட்டாரவி தேஜா, மாவட்ட குழு தலைவர் ஜெயசந்திரன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புதூரில் ரூ. 21 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டிடத்தை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திருமதி. கங்கா, வட்டாட்சியர் சசிகுமார், தூத்துக்குடி மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்த சேகரன், ஒன்றியக் கழக செயலாளர்கள் இராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி,பேரூர்க் கழகச் செயலாளர் மருதுபாண்டி உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சி.எம்.இராமசாமி

மே 17 (1999)



இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைச் செயலாளராக மூன்று முறையும் – மாதவரம் ஒன்றிய துணைச் செயலாளராக இரண்டு முறையும் – மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக, மிசா சட்டத்தை கண்டித்து, கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.